தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (9.2.2025) சென்னை, கிண்டியில் நடைபெற்ற, பங்கஜ் குமார் பன்சல், திருமதி.ஜி. லதா, இல்லத் திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, மணமக்கள் ஜே. எல். சுஜரிதா கௌதம் கே.ராம் ஆகியோருக்கு மரக்கன்று பசுமைக்கூடை வழங்கி, வாழ்த்தினார். உடன், கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (9.2.2025) சென்னை, ஈஞ்சம்பாக்கத்தில் நடைபெற்ற, எஸ். சதிஷ்குமாரின் மகள் எஸ். கமலி – ஆர். சிவக்குமார் ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, மரக்கன்று பசுமைக்கூடை வழங்கி மணமக்களை வாழ்த்தினார். உடன் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (9.2.2025) திருச்சிராப்பள்ளி மாவட்டம் அய்யாளம்மன் படித்துறை பகுதியில் சுற்றுலா பயணிகளை கவரும் வகையில் ரூ.18.63 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள திருச்சி பறவைகள் பூங்காவினை திறந்து வைத்து பார்வையிட்டார். இந்நிகழ்வில் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, சட்டத் துறை அமைச்சர் எஸ். இரகுபதி, பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ. மெய்ய நாதன், திருச்சிராப்பள்ளி மாநகராட்சி மேயர் மு.அன்பழகன், சட்டமன்ற உறுப்பினர்கள் அ.சௌந்தரபாண்டியன், செ.ஸ்டாலின் குமார், ந. தியாகராஜன், எம்.பழனியாண்டி, மாவட்ட ஆட்சியர் மா.பிரதீப் குமார் மற்றும் அரசு அலுவலர்கள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

ரூ.18.63 கோடி மதிப்பீட்டில் திருச்சியில் பறவைகள் பூங்கா!

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார்!

திருச்சி, பிப்.10-

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (9.2.2025) திருச்சிராப் பள்ளி மாவட்டம், அந்தநல்லூர் ஊராட்சி ஒன்றியம், கம்பரசம் பேட்டை ஊராட்சி, அய்யாளம்மன் படித்துறை பகுதியில் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் சுற்றுலா பயணிகளை கவரும் வகையில் ரூ.18.63 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள திருச்சி பறவைகள் பூங்காவினை திறந்து வைத்து பார்வையிட்டார்.

திருச்சிராப்பள்ளி மாவட்டம் தமிழ்நாட்டின் மைய பகுதியில், அனைத்து மாவட்டங்களுக்கும் எளிதில் செல்லும் வகையில் போக்குவரத்து வசதியுடன் அமைந்துள்ளது. திருச்சிராப்பள்ளி மாவட்டத்தின் முக்கொம்பு சுற்றுலாத் தலம் மிகவும் புகழ்பெற்றதாகும். அகன்ற ஆறாக இருக்கும் காவிரி ஆறு திருச்சிராப்பள்ளி மாவட்டம் முக்கொம்பில் காவிரி, கொள்ளிடம் என்று இரண்டு ஆறுகளாக இயற்கையிலேயே பிரிந்து பல நூற்றாண்டு களாக புகழ்பெற்ற சுற்றுலாத்தலமாக திகழ்ந்து வருகின்றது.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்திற்கு மேலும் சிறப்பு சேர்க்கும் வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி நமக்கு நாமே திட்டத்தின் கீழ் 18.63 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அந்தநல்லூர் ஊராட்சி ஒன்றியம், கம்பரசம் பேட்டை ஊராட்சி, அய்யாளம்மன் படித்துறை பகுதியில் 4.02 ஏக்கர் பரப்பளவில் திருச்சி பறவைகள் பூங்கா அமைக்கும் பணிகள் கடந்த 2023ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தொடங்கி, தற்போது பணிகள் முடிவடைந்துள்ளன. திருச்சி சத்திரம் பேருந்து நிலையத்திலிருந்து இரண்டு கிலோமீட்டர் தொலைவில் இந்த பூங்கா அமைக்கப்பட்டுள்ளது மிகச் சிறப்பானதாகும்.

திருச்சி பறவைகள் பூங்காவில் 60,000 சதுர அடி பரப்பளவில் ஐந்திணை என்றழைக்கப்படும் குறிஞ்சி, முல்லை, மருதம், பாலை, நெய்தல் ஆகிய 5 வகை நில அமைப்புகளை விவரிக்கும் வகையில் அந்த நிலப்பகுதிகளுக்கான அடையாளங்கள் அமைக்கப்பட்டு, அங்கு பல்வேறு வண்ணங்களால் மனதை கொள்ளை கொள்ளும் வகையிலான நூற்றுக்கணக்கான பறவைகள் விடப்பட்டுள்ளன. இந்த பகுதிக்குச் செல்லும் பார்வையாளர்களின் மீது பறவைகள் அமர்ந்து அவர்களிடம் கெஞ்சும் அழகு காண இயலாததாகும். மேலும் இங்கு பார்வையாளர்கள் பறவைகளுக்கான பிரத்யேக உணவினை வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. பறவைகள் தங்குவதற்கென பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட குடில்கள் மற்றும் கூண்டுகள் அமைக்கப்பட்டுள்ளன.

பல்வேறு பறவைகள்!

மேலும், சுருள் ரெக்கை (FRILL BACK), பொமேரியன் பௌட்டர் (Pomeranian Pouter), கேடய பௌட்டர் (SHIELD POUTER), கிளி மூக்கு (SCANDAROON, வைர புறா (DIAMOND DOVE), நீண்ட முகம் டம்ளர் (Long Face Tumbler), கட்ட வால் (MALTESE), ஓரியண்டல் பிரில் (ORIENTAL FRILL), பூ ரெக்கை (Spanish Chorrera), மூஞ்சி மூடி (JACOBIN), போண்டா புறா (Modena), சின்ன மூஞ்சி (Short face), அழகு ஹோமர் (Beauty homer), கழுத்தசைப்பான் (Neck Shaker), கேரியர் புறா (Carrier pigeon), மாக்பை பௌட்டர் (MAGPIE Pouter), அரசன் (KING), செம்பு புறா (ARACHANGEL), ஆகிய புறா வகைகள் தனித்தனியே காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

பல்வேறு வகையான அழகிய கோழியினங்கள், நெருப்புக்கோழிகள், ஈமுக்கள் தனியாக காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. பல வகை வாத்துகள், பலவகை கிளிவகைகள், பலவகை குருவிகள் தனித்தனியே காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. பல வகையான முயல்கள் தனியாக காட்சிப் படுத்தப்பட்டுள்ளன. திருச்சி பறவை பூங்காவில் அமைக்கப்பட்டுள்ள கோய் மீன் குளம் (KOI FISH POND) குழந்தைகளை வெகுவாக கவரும்.

இந்தியாவிலேயே திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள திருச்சி பறவைகள் பூங்கா மிகப்பெரிய பறவைக் கூடம் என்பது ஒரு முக்கிய சிறப்பம்சமாகும். மேலும் இங்கு பறவைகளின் இனப்பெருக்கத்திற்கென தனிக்கூடம் அமைக்கப்பட்டுள்ளது.

திருச்சி பறவை பூங்காவில் கூடுதலாக 7 டி மினி திரையரங்கில் பார்வையாளர்களுக்கு திரையிடப்படும் படங்கள் முப்பரிமாண காட்சிகளாக அருகில் தெரிவதுடன், காட்சிகளின் அமைப்பிற்கு ஏற்ப தங்களைச் சுற்றி ஈரமாக உணர்வது, தங்கள் உடலை காற்று தழுவுவது, அதிர்வுகளை உணர்தல் உள்ளிட்ட சிறப்புகளுடன் அமைக்கப்பட்டுள்ளது. இத்திரையரங்கில் ஒரே நேரத்தில் பொதுமக்கள் 50 பேர் அமர்ந்து பார்வையிட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இயற்கை ஆர்வலர்கள், செல்லப்பிராணி ஆர்வலர்கள், பொதுமக்கள், சிறுவர்கள் உள்ளிட்ட அனைத்து தரப்பு மக்களையும் கவரும் வகையில் இந்த பறவைகள் பூங்கா அமைக்கப்பட்டுள்ளது. இந்த பூங்காவினை துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (9.2.2025) திறந்து வைத்தார். இந்த திருச்சி பறவைகள் பூங்கா தமிழ்நாட்டின் அனைத்து பகுதி சுற்றுலா பயணிகளுக்கும் ஒரு வரப் பிரசாதமாக அமையும் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்ச்சியில் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, சட்டத் துறை அமைச்சர் எஸ். இரகுபதி, பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், திருச்சிராப்பள்ளி மாநகராட்சி மேயர் மு.அன்பழகன், சட்டமன்ற உறுப்பினர்கள் அ. சௌந்தரபாண்டியன், செ.ஸ்டாலின் குமார், ந.தியாகராஜன், எம்.பழனியாண்டி, மாவட்ட ஆட்சியர் மா.பிரதீப் குமார், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி ர.ராஜலெட்சுமி, திட்ட இயக்குநர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திருமதி கங்காதாரணி உள்பட அரசு அலுவலர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

பள்ளிக்கல்வி நிதியை வழங்க மறுப்பு!

ஒன்றிய பாசிச அரசை மாணவர்கள் - ஆசிரியர்கள் மன்னிக்க மாட்டார்கள்!

பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி கடும் கண்டனம்!

சென்னை, பிப்.10-

"ஒருங்கிணைந்த் பள்ளிக் கல்வித் திட்டத்தின் கீழ் தமிழ் நாட்டிற்குத் தர வேண்டிய ரூ.2152 கோடியை குஜராத் மற்றும் உத்திரபிரதேச மாநிலங்களுக்கு அனுப்பி ஒன்றிய பா.ஜ.க. அரசு தமிழ்நாட்டை வஞ்சித்துள்ளது" என்று பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

இதுகுறித்து பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்கள் அறிக்கை வருமாறு :-

ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வித் திட்டத்தின் கீழ் தமிழ் நாட்டிற்கு தரவேண்டிய ரூ.2152 கோடியை குஜராத், உத்திரபிரதேசம் போன்ற பிற மாநிலங்களுக்கு அளித்துள்ளது தமிழர் விரோத ஒன்றிய அரசு.

தேசிய கல்விக் கொள்கையின் ஒரு பகுதியான PMShri திட்டத்தில் நாம் இணைய வேண்டும் என ஒன்றிய அரசு கட்டாயப்படுத்துகிறது. அத்திட்டத்தில் இணைந்தால் தமிழ்நாட்டில் மும்மொழிக் கொள்கை அமல்படுத்த நேரிடும் என்பதால் முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் படி உறுதியுடன் நாம் மறுத்து வருவதால் நமக்கு தரவேண்டிய நிதியை அவர்கள் ஆளும் மாநிலங்களுக்கு ஒதுக்கி உள்ளது பாசிச பாஜக அரசு.

வஞ்சக மனப்பான்மையோடு செயல்படும் ஒன்றிய பாசிச அரசை மாணவர்களும், ஆசிரியர்களும் மன்னிக்க மாட்டார்கள்.

மாநில உரிமையைப் பெறும் போராட்டத்தில் தொடர்ந்து ஈடுபடுவோம். கல்வியை மாநிலப் பட்டியலுக்கு கொண்டு வருவோம். கல்வி விடுதலை ஒன்றே நமது மாநிலத்தின் கல்வி முன்னேற்றத்திற்கு தீர்வு தரும்!

இவ்வாறு அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்கள் கூறியுள்ளார்.